



கல்வி பொது தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

# கத்தோலிக்கத் திருமறை

# வினா விடைகள்

# 2024

வெளியீடு: தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்

## கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2024
## கத்தோலிக்கத் திருமறை

---

### பகுதி I

(சரியான விடை கோடிட்டு காட்டப்பட்டுள்ளது)

1. திருவிவிலித்தைப் பிரிக்கக்கூடிய பகுதிகளின் எண்ணிக்கை
   1. 2 ஆகும்  2. 3 ஆகும்  3. 4 ஆகும்  4. 5 ஆகும்

2. போலி ஆசிரியர்களின் தவறான கற்பித்தலை சீர் செய்வதை நோக்கமாக கொண்டு திருமுகம் ஒன்று யாருக்கு எழுதப்பட்டது?
   1. கலாத்தியருக்கு  2. கொரிந்தியருக்கு
   3. தெசலோனிக்கேயருக்கு  4. கொலோசையருக்கு

3. புதிய ஏற்பாட்டிற்குரிய திருமுகங்களின் எண்ணிக்கை,
   1. 20 ஆகும்  2. 21 ஆகும்  3. 23 ஆகும்  4. 24 ஆகும்

4. தொமீசியன் எனும் உரோமைப் பேரரசனின் கீழ் கொடிய கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்களை திடப்படுத்தவும் நம்பிக்கையில் உறுதிப்படுத்தவும் எழுதப்பட்ட நூல்,
   1. நீதி மொழிகள்  2. சபை உரையாளர்
   3. திருவெளிப்பாடு  4. சீராக்கின் ஞானம்

5. நன்மை தீமையைப் பகுத்தறிந்து, நன்மையைத் தமது வாழ்வில் கடைப்பிடித்து கடவுளுக்கு உகந்த நேரிய வாழ்க்கை வாழ்வது,
   1. ஞானம் ஆகும்  2. புத்தி ஆகும்
   3. அறிவு ஆகும்  4. தேவபயம் ஆகும்

6. “இது முதல் மானிட மகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார்”. என இயேசு வெளிப்படுத்தியது யார் முன்னிலையில்?
   1. ஏரோது அந்திபாஸ் முன்னிலையில்  2. உரோமைப் பேரரசன் முன்னிலையில்
   3. ஆளுநன் பிலாத்துவின் முன்னிலையில்  4. யூதர்களின் மூப்பர் சங்கத்தில்

7. “மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும்” இயேசு இவ்வாறு கூறியது,
   1. புனித யோவானுக்கு  2. புனித பவுலுக்கு
   3. புனித பேதுருவுக்கு  4. புனித யாக்கோபுவுக்கு

8. திருச்சபையின் ஏகம் என்பதன் மூலம் கருதப்படுவது,
   1. அப்போஸ்தலிக்கம்  2. பரிசுத்தம்
   3. கத்தோலிக்கம்  4. ஒருமைத்துவம்

9. இயேசு நித்திய வாழ்வு தரும் உணவாகிய தேவநற்கருணையை நிறுவியது,
   1. பெரிய வியாழனன்று  2. பெரிய வெள்ளியன்று
   3. பெரிய சனியன்று  4. பாஸ்கா ஞாயிறன்று

10. பழைய ஏற்பாட்டின் வழிபாடுகளில் பிரதான செயற்பாடு,
   1. சினகொக் செல்லுதல்
   2. அயலாருக்கு அன்பு செலுத்துதல்
   3. பலி செலுத்துதல்
   4. எருசலேம் தேவாலயம் கட்டுதல்

11. புனித மக்ஸிமிலியன் கோல்ப் அடிகளாருக்கு தேவ அன்னை காட்சி கொடுத்தபோது அன்னையின் கையில் இருந்தவை யாவை?
   1. திருச்சிலுவையும் செபமாலையும்
   2. வெள்ளைநிற றோஜா முடியும் திருச்சிலுவையும்
   3. சிவப்பு நிற ரோஜா முடியும் திருச்சிலுவையும்
   4. வெள்ளை நிற றோஜா முடியும் சிவப்பு நிற றோஜா முடியும்

12. “என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தலாகாது” இவ்வெளிப்பாடு பத்துக் கட்டளைகளில் எத்தனையாவது கட்டளையுடன் தொடர்புடையது
   1. முதலாம் கட்டளையுடன்
   2. இரண்டாம் கட்டளையுடன்
   3. மூன்றாம் கட்டளையுடன்
   4. நான்காம் கட்டளையுடன்

13. குலமுதுவர் யாக்கோபுவின் மகன் யோசேப்புவை குற்றத்திற்கு உட்படுத்திக்கொள்ள முயற்சித்தவர் யாருடைய மனைவி?
   1. இஸ்மாயேலின்
   2. போத்திபாரின்
   3. ஏசேயின்
   4. றூபனின்

14. தாம் கல்வி கற்கும் பாடசாலையின் சட்ட ஒழுங்குகளை அவமதித்தல் ஓர் எதிரான செயலாக அமைவது,
   1. மூன்றாவது கட்டளைக்கு
   2. நான்காவது கட்டளைக்கு
   3. ஐந்தாவது கட்டளைக்கு
   4. ஆறாவது கட்டளைக்கு

15. ஏழாம் கட்டளைக்கு எதிராக செய்யும் ஒரு செயல்,
   1. தற்கொலையாகும்
   2. வாக்குறிதியை மீறுதல் ஆகும்
   3. பிறர் குற்றத்தை பிரசித்திபடுத்துதல் ஆகும்
   4. பிறர் உடமைகளை அபகரித்தல் ஆகும்

16. “தூய ஆவியாரை சோதிக்க நீங்கள் உடன்பட்டதேன்? இதோ உன் கணவனை அடக்கம் செய்தவர்கள் கதவருகில் வந்துவிட்டார்கள்” இவ்வாறு புனித பேதுருவானவர் கூறியது,
   1. சப்பிராளுக்கு
   2. மார்த்தாவிற்கு
   3. பிறிஸ்கிலாவிற்கு
   4. லிதியாவிற்கு

17. திருவழிபாட்டு ஆண்டில் தை மாதத்தில் நிறைவேற்றப்படும் ஒரு திருவிழா,
   1. புனித சூசையப்பரின் திருவிழா
   2. நற்செய்தியாளர் புனித மாற்குவின் திருவிழா
   3. இயேசு உருமாற்றம் பெற்ற திருவிழா
   4. ஆண்டவரின் திருக்காட்சித் திருவிழா.

18. திருப்பலியில் ஆசிநீர் தெளித்தல்,
   1. நற்கருணை வழிபாடாகும்
   2. மனத்துயர் வழிபாடாகும்
   3. இறைவார்த்தை வழிபாடு
   4. பீடத்தை ஆயத்தம் செய்தல்

19. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. "புனித யோவான் நற்செய்தியின்படி, ஒரே கடவுளாகிய தந்தையும் அவர் அனுப்பிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே ……." ஆகும்.
   1. இறை நம்பிக்கை
   2. அன்பின் சிறப்பு
   3. நிலை வாழ்வு
   4. உறுதிப்பூசுதல்.

20. இயேசு பூங்காவனத்தில் (கெத்சமனி தோட்டத்தில்) தமது சீடர்களுக்கு எத்தனை முறை செபிக்கும்படி அறிவுரை வழங்கினார்?
   1. இரண்டு முறை
   2. மூன்று முறை
   3. நான்கு முறை
   4. ஐந்து முறை

21. ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களும், ஏற்றுக் கொள்ளப்பட்ட இணைத்திருமுறை நூல்களும் வேறுபடுத்திக் காட்டப்படாதிருப்பது,
   1. இலத்தின் பிரதியிலாகும்
   2. கிரேக்கப் பிரதியிலாகும்
   3. மசரோடிக் பிரதியிலாகும்
   4. எபிரேய பிரதியிலாகும்

22. எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பெயர்கள் மட்டும் உள்ளடங்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
   1. எலியா, அபியா, மீக்கா, யோனா
   2. நாத்தான், எலியா, மீக்கா, யோபு
   3. எலியா, குல்தா, மீக்காயா, அபியா
   4. குல்தா, மீக்காயா, யோபு, நாத்தான்

23. "நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பது ஏன்?" இவ்வாறு யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   1. ஆண்டவரால் காயினுக்கு
   2. ஆண்டவரால் ஆதாமுக்கு
   2. திருமுழுக்கு யோவானால் ஏரோதுவுக்கு
   4. இயேசுவால் பரிசேயனுக்கு

24. வெற்றிடத்துக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. ஆபிரகாமின் பரம்பரை எகிப்தில் வளர்ச்சியடைந்தது ……….. அனுமதியுடனாகும்.
   1. பார்வோன் அரசனின்
   2. இஸ்ரயேலரின்
   3. யோசேப்பின்
   4. எகிப்திய அரசர்களின்

25. பெரும் துன்பங்கள் 4, 6, 8 வரிசைப்படி சரியாகக் காணப்படும் தொகுதியைத் தெரிவு செய்க.
   1. தவளைகள் பெருக்கம், ஈக்களின் பெருக்கம், வெட்டுக்கிளிகள் பரவுதல்.
   2. கொசுக்களின் தொல்லை, ஈக்களின் பெருக்கம், கொப்புளங்கள் தோன்றுதல்.
   3. ஈக்களின் பெருக்கம், கொப்புளங்கள் தோன்றுதல், வெட்டுக்கிளிகள் பரவுதல்.
   4. ஈக்களின் பெருக்கம், கல்மழை, வெட்டுக்கிளிகள் பரவுதல்.

26. ''நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே, உங்கள் ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும்'' இவ்வாறு குறிப்பிடப்படுவது,
   1. தொடக்க நூலில்
   2. விடுதலைப் பயண நூலில்
   3. எண்ணிக்கை நூலில்
   4. இணைச்சட்ட நூலில்

27. இறைவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை முன்வைத்துள்ள மரபுகள் இரண்டுமாவன,
   1. யாவே மரபு, எலோகிம் மரபு
   2. இணைச்சட்ட மரபு, குருக்கள் மரபு
   3. யாவே மரபு, குருக்கள் மரபு
   4. யாவே மரபு, இணைச்சட்ட மரபு

28. புதிய சமூகக் கோட்பாட்டில் நீதியும், சமத்துவமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், அன்பும், இரக்கமும் அடங்கியுள்ளதா என முன்வைத்தவர்,

1. மோசே ஆவார்
2. இயேசு கிறிஸ்து ஆவார்
3. திருமுழுக்கு யோவான் ஆவார்
4. ஆபிரகாம் ஆவார்

29. “மகளே, துணிவோடு இரு. உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று”, என இயேசு கூறியது,

1. மரிய மதலேனாவிற்கு
2. சமாரியப் பெண்ணுக்கு
3. தலைமைக் குருவின் மகளுக்கு
4. இரத்தப்போக்குடைய பெண்ணுக்கு

30. பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துக.

அ. திருமுழுக்கில் பிரதான மற்றும் கட்டாய அடையாளமாகும்.
ஆ. உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாகும்.
இ. கிறிஸ்தவனாக திடப்படுத்துகிறது.
ஈ. புனிதத்துவத்தின் அடையாளமாகும்.

மேற்கூறிய ஒவ்வொரு விடயத்தின் மூலமும் வெளிப்படுத்தப்படுவது திருமுக்கின் போது பயன்படுத்தப்படும் பொருட்களின் கருத்தாகும். அப்பொருட்கள் வரிசைப்படி குறிப்பிடப்பட்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

1. கிறிஸ்மா தைலம், பாஸ்காத் திரி, தண்ணீர், வெண்ணிற ஆடை
2. பாஸ்காதிரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை, தண்ணீர்
3. கிறிஸ்மா தைலம், தண்ணீர், பாஸ்காதிரி, வெண்ணிற ஆடை
4. தண்ணீர், பாஸ்கா திரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை.

31. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. குருத்துவத்தின் முழு நிறைவு …………நிலையாகும்.

1. ஆயர்
2. ஏகாந்தி
3. திருத்தொண்டர்
4. துறவற

32. திருமணமாகாது தமது முழு வாழ்க்கையையும் இறை அரசுக்காக அர்ப்பணித்தலைக் குறிப்பது,

1. பணி வாழ்வு என்றாகும்
2. குருத்துவ மணத்துறவு என்றாகும்
3. குழுவாழ்வு என்றாகும்
4. தன்னலமற்ற வாழ்வு என்றாகும்.

33. துறவற வாழ்வுக்கான ஒழுங்கு விதிமுறைகளை எழுதியவர்களாகவும், துறவற வாழ்வை முறைப்படுத்த உழைத்தவர்களுமாகக் கணிக்கப்படுபவர்கள்,

1. புனித யோவான் மற்றும் புனித அகுஸ்தினார் ஆவர்.
2. புனித ஆசீர்வாதப்பர் மற்றும் புனித பசில் ஆவர்.
3. புனித ஜெரோம் மற்றும் புனித யோவான் ஆவர்.
4. புனித ஆசீர்வாதப்பர் மற்றும் புனித பக்கோமியோ ஆவர்.

34. கிறிஸ்தவனுக்கு பொதுக் குருத்துவத்தின் மூலம் இறைவாக்குப் பணியில் ஈடுபட உதவியாக இருப்பது,

1. மரியாயின் சேனை ஆகும்
2. மறைப்பாடசாலை ஆகும்
3. இயேசுவின் திரு இருதய சபையாகும்
4. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கமாகும்.

35. திரு. பிராங்டப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட பொது நிலையினர் அப்போஸ்தலிக்கப் பணி,
   1. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கமாகும்
   2. இயேசுவின் திரு இருதய சபையாகும்
   3. மரியாயின் சேனையாகும்
   4. தூய வின்சன் டி போல் சபையாகும்

36. இறை - மனித உரையாடலுக்காக இயேசு நமக்களித்த முழுமையான எடுத்துக் காட்டு
   1. பாலை நிலத்துச் செபமாகும்
   2. பூங்காவனத்தில் செபமாகும்
   3. உன்னத குருவின் செபமாகும்
   4. இயேசு கற்பித்த செபமாகும்

37. கத்தோலிக்கத் திருச்சபை மறைக்கல்வியின் படி நமது ஆராதனை உரிமையாவது,
   1. தந்தையாகிய இறைவனுக்கு, சுதனாகிய இறைவனுக்கு, மரியன்னைக்கு மட்டுமே.
   2. தந்தையாகிய இறைவனுக்கு, சுதனாகிய இறைவனுக்கு, தூய ஆவியானவருக்கு மட்டுமே.
   3. தந்தையாகிய இறைவனுக்கு, மரியன்னைக்கு, தூய ஆவியானவருக்கு மட்டுமே.
   4. சுதனாகிய இறைவனுக்கு, மரியன்னைக்கு, தூய ஆவியானவருக்கு மட்டுமே.

38. கி. பி. 1917இல் பாத்திமா நகரில் மரியன்னை காட்சி கொடுத்தது யாருக்கு?
   1. பிரான்சிஸ், ஜசிந்தா மற்றும் லூசியா
   2. பிரான்சிஸ், பெர்ணதேத் மற்றும் ஜசிந்தா
   3. ஜசிந்தா, லூசியா மற்றும் கொறட்டி
   4. லூசியா, பெலிசிட்டா மற்றும் ஜசிந்தா.

39. இடையறாது ஒவ்வொரு வேளையும் இறைவனைப் புகழ்வது,
   1. எங்களுக்கு தேவையானதைப் பெற்றுக்கொள்வதற்காகும்.
   2. அதில் தாவீது மன்னனின் திருப்பாடல்கள் இருப்பதினாலாகும்.
   3. எல்லாக்காலமும் இறைவனுக்கு உரியது என்பதனாலாகும்
   4. பழைய இஸ்ரயேலரின் பழக்கமாக இருந்துவந்துள்ளதாலாகும்

40. கத்தோலிக்கராகிய நமது தியானத்திற்கு அடித்தளமாக இருப்பது.
   1. இறைவார்த்தை அடங்கியுள்ள திருவிவிலியமாகும்
   2. பெரிய குறிப்பிடமாகும்
   3. சின்ன குறிப்பிடமாகும்
   4. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலாகும்.

பகுதி - **II**

(01) i. புனித பவுல் மூலம் அனுப்பப்பட்ட திருமுகங்கள் வழியாக நிறைவேற்றப்பட்ட பணிகள் இரண்டினை எழுதுக.

- கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு அறிவுரை வழங்குதல்
- கிறிஸ்தவ சபைகளில் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- நம்பிக்கையில் திடப்படுத்ததுதல்
- போலி ஆசிரியர்களின் தவறான கற்பித்தலில் இருந்து கிறிஸ்தவர்களைப் பாதுகாத்தல்

ii. புனித யோசேப் வாஸ் அடிகளாரின் பெற்றோரின் பெயர்களை எழுதுக.

- கிறிஸ்டோப்பர் வாஸ்
- மரிய மிரண்டா

iii. நான்காம் கட்டளையின்படி அன்புடன் வாழ்க்கை நடாத்த குடும்பத்திற்கு வெளியே மற்றவர்களுக்காகச் செய்யக்கூடிய இரு செயல்களை எழுதுக.

- மற்றவர்களுக்காக தன்னை அர்ப்பணித்தல்
- இருப்பதை மற்றவர்களுடன் மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல்
- பிறர் தேவைகளில் உதவுதல்
- மற்றவர்களோடு சந்தோஷமாகவும், ஒற்றுமையாகவும் வாழுதல்
- நாட்டுப் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்
- ஆட்சியில் இருப்போருக்காகச் செபித்தல்.

iv. உமது வாழ்வை இறைவனுக்கு உகந்த காணிக்கையாக அமைத்துக் கொள்வது எவ்வாறு என்பதை எடுத்துக்காட்ட இரு உதாரணங்கள் தருக.

- அன்றாடம் செய்யும் வேலைகள் துன்ப, துயரங்கள் மகிழ்ச்சி அனைத்தையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கும் காணிக்கையாகச் மாற்றிக் கொள்ளுதல்.
- எமக்குள்ள பொறுப்புக்கள், கடமைகளைச் சரியாக நிறைவேற்றி எமது அன்றாட வாழ்வை இறைவனுக்கு ஏற்ற பலியாகுதல்

v. ஒழுக்க வாழ்வு தொடர்பான இரு கட்டங்களையும் எழுதுக.

- 6வது கட்டளை - விபசாரம் செய்யாதிருப்பாயாக
- 9வது கட்டளை - பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக

vi. திருவிவிலியத்தில் காணப்படும் உடன்படிக்கைகள் பொதுவாகச் சமுதாயத்தில் காணப்படும் உடன்படிக்கைகளை விட முற்றிலும் வேறுபட்டதாகும். அவ்வேறுபாடுகளை இரண்டினை எழுதுக.

- உடன்படிக்கைக்கு முன்வருபவர் இறைவன்
- இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் எல்லையற்ற இடைவெளி இருக்கிறது.
- இறைவன் வாக்குறுதிகளுக்கு நம்பிக்கைக்குரியவராக இருந்தபோதும் மனிதன் அந்த வாக்குறுதியை மீறுகிறான்.

vii. திருமுழுக்கு யோவான் படைவீரர்களுக்கு கூறிய அறிவுரைகள் இரண்டு எழுதுக.

- நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள்.

● யார் மீதும் குற்றம் சுமத்தாதீர்கள்
● உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்.

viii. 'கடவுளைக் காண்பர்', 'கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்' என்னும் பேறுகள் உள்ளடங்கும் வசனங்கள் இரண்டினையும் முழுமையாக எழுதுக.
● தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
● அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.

ix. திருமணத்தின்போது செய்யும் திருமண வாக்குறிதியில் அடங்கியுள்ள வாக்குறுதிகள் இரண்டு தருக.
● உம்மை என் கணவனாக / மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன் என்பது,
● இன்பத்திலும் துன்பத்திலும் நோயிலும் உடல் நலத்திலும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக இருக்க வாக்குப் பண்ணுதல்.

x. மரியாளுக்குரிய திருவிழாக்களில் கடன் திருநாட்கள் இரண்டினை எழுதுக.
● தை 01 புனித மரியாள் இறைவனின் தாய்
● ஆவணி 15 மரியன்னையின் விண்ணேற்புத் திருவிழா
● மார்கழி 08 மரியாவின் அமல உற்பவத் திருவிழா.

(02) i. இயேசுவின் விண்ணேற்பின் பின்பு தூய ஆவியின் வருகையை எதிர்நோக்கி இருந்த மரியாள் உட்பட சீடர்கள் குழு தூய ஆவியின் வருகை நாளில் அனுபவத்தில் கண்ட நிகழ்வுகள் இரண்டினை எழுதுக.
● திடீரென கொடுங்காற்று வீசுவது போன்ற ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது.
● நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மீதும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள்.
● தூய ஆவியால் நிரப்பப்பட்ட சீடர்கள் அவ்வல்லமையால் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினர்.

ii. தொடக்க திருச்சபையில் திருத்தொண்டர்களை நியமிக்கும் போது அவர்களில் அவதானிக்கப்பட்ட பண்புகள் மூன்றினையும் எழுதுக.
● நற்சான்று பெற்றவர்கள்
● தூய ஆவி அருளும் வல்லமையும் பெற்றவர்கள்.
● ஞானம் நிறைந்தவர்கள்

iii. உமது வாழ்வில் தூய ஆவியின் கொடைகளை அனுபவித்த சந்தர்ப்பங்கள் ஐந்தினைச் சுருக்கமாக விபரிக்குக.
● வீட்டில் பொருளாதாரப் பிரச்சினையின் போது செபித்ததால் அதற்கான பிரதிபலன் கிடைத்தது.
● வகுப்பில் ஒரு நண்பர் ஒருவர் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டார். அவருக்காக தொடர்ந்து செபித்தேன் அவர் முற்றாக குணமடைந்தார்.
● வகுப்பில் சக மாணவர் இருவர் எப்போதும் சண்டை பிடிப்பர். தூய ஆவியிடம் அவர்களுக்காக செபித்தேன். சிறிது காலத்தில் அவர்கள் இருவரும் நண்பர்களாயினர்.
● படிக்கத் தொடங்கும் முன், ஒரு பயணத்தை தொடங்கும் முன், எந்தவொரு வேலையையும் செய்யத் தொடங்கு முன் செபிப்பேன். அதன் வழியாக தூய ஆவி என்னுடன் இருந்து எனக்கு உதவி செய்து வருகிறார் என்பதை உணர்ந்திருக்கின்றேன்

**(03) i. மறைத்தூதுரைப் பயணத்தின் போது புனித பவுல் முகம் கொடுத்த தடைகள் இரண்டினைப் பெயரிடுக.**

- சிறையிலிடப்படுதல்
- கல்லால் எறியப்பட்டு நகருக்கு வெளியே இழுத்துக் கொண்டு போகப்படல்.
- யூதர்களின் எதிர்ப்புக்கு ஆளாதல்.

**ii. புனித பவுலின் இரண்டாவது தூதுரைப்பயணத்தில் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அவருடன் இணைந்து கொண்ட மூவரினதும் பெயர்களைத் தருக.**

- சீலாவுடன் பயணத்தை ஆரம்பித்தார்
- பின்னர் திமோத்தேயுவும் புனித லூக்காவும் இதிலிணைந்து கொண்டனர்.

**iii. ஒரு மாணவனாக உமது பாடசாலையில் இறைவனுக்காக உம்மால் செய்யக் கூடிய செயல்கள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.**

- வகுப்பு ஆரம்பிக்கும் முன் செபித்தல்.
- மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக சொல்லிலும் செயலிலும் நடந்துகொள்ளுதல்.
- பொது வேலைகளில் நேர்மையுடன் கலந்து கொண்டு இறுதி வரை அதனை செய்து முடித்தல்.
- வகுப்பில் அனைவருடனும் அன்பாகப் பழகுதல்.
- மற்றவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்ட வேளை அதனை செய்து கொடுத்தல்.
- ஆசிரியர்களுக்கு கீழ்படிந்து வகுப்பில் தரப்படும் பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றுதல்.
- பாடசாலை சூழலைப் பாதுகாத்தல்.
- பாடசாலையில் எங்கள் தேவைகளுக்காக பயன்படுத்தும் பொதுப் பொருட்களை கவனமாக பயன்படுத்தி அவற்றைப் பாதுகாத்தல்.

**(04) i. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வியின்படி எமது வாழ்க்கை மட்டில் எமக்குள்ள பொறுப்புக்கள் இரண்டினை எழுதுக.**

- இறைவன் எமக்கு தந்த வாழ்வை நன்றியுடன் ஏற்று இறைவனின் மகிமைக்காகவும் எமது ஆன்ம மீட்புக்காகவும் அந்த வாழ்வை பாதுகாத்துக் கொள்வது எமது கடமையாகும்.
- இறைவனுக்கு சொந்தமான வாழ்வை நாம் அழித்துக்கொள்ள அது எங்களுடையது அல்ல.
- எமது உயிரை அழிப்பது இறையன்பிற்கு எதிராக செய்யும் மிகப்பெரிய பாவமாகும்.

**ii. இறைவன் மனிதனால் ஆளப்பட்ட அவனுக்கு கீழ் உருவாக்கிய விலங்கினங்கள் மூன்றின் பெயரைத் தருக.**

- கடல் மீன்கள்
- ஆகாயத்துப் பறவைகள்
- நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன
- மிருகங்கள்
- காட்டு விலங்குகள்.

**iii. மற்றவர்களின் வாழ்க்கையை பாதுகாக்க நீர் எவ்வாறு செயற்படுவீர் என்பதற்கு ஐந்து காரணிகள் மூலம் விபரிக்குக.**

- மனிதர்கள் தங்கள் சுயாதீனத்தைப் பயன்படுத்தி மனச்சான்றின்படி செயற்பட உதவுதல்.
- தீங்குவரும் முன் பாதுகாத்தல்.
- சூழலைப் பாதுகாத்தல், சூழலை மாசுபடுத்தும் செயல்களைத் தவிர்த்தல்.
- மரங்களை அழிக்காது சூழலை அழகுபடுத்தி மானுட இனம் வாழ தகுந்த சூழலை உருவாக்குதல்.

- சிறுவர்களுக்கும் விதவைகளுக்கும் விசேடமாக உதவுதல்.
- தனிமையில் வாழ்வோருக்கு எனது வார்த்தையால் தைரியம் ஊட்டி உதவுதல்
- பசித்திருப்போருடன் உணவைப் பகிர்ந்து கொள்ளல்.
- வைத்திய தேவை இருந்தும் வசதியற்று இருப்போருக்கு இயன்ற முறையில் உதவுதல்.

**(05) i. ஐந்நூலின் குருக்கள் மரபை சேர்ந்த இரு நிகழ்வுகளை எழுதுக.**
- படைப்புபற்றிய முதல் கதை
- நோவாவுடனான உடன்படிக்கை

**ii. ஐந்நூலின் முக்கியத்துவத்தை மூன்று விடயங்களில் முன்வைக்குக.**
- ஐந்நூல் அதிகமாக இறையியல் சிந்தனைகளைக் கொண்டது.
- ஒரே இறைவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்பதை எமக்கு எடுத்துரைக்கின்றது.
- இறைவனன்பு இரக்கத்தின் நிமித்தம் உலகின் மீட்புக்காக தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் இஸ்ரயேலர் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.
- இஸ்ரயேலரை அடிமைத் தனத்திலிருந்து மீட்டு வாக்குபண்ணப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றதன் மூலம் அவர்களின் மூதாதையருக்கு கொடுத்த வாக்குறுதியை இறைவன் நிறைவேற்றுவதை காண்கின்றோம்.
- இறைசட்டத்தின் மூலம் பலவீனமான மனிதர்கள் இறைவனை சார்ந்து வாழ்ந்து அவரது ஆசீரைப் பெற தகுதியுடையவராகின்றனர்.

**iii. இறைவார்த்தையை உமது வாழ்க்கைக்கு ஒளியாக்கிக் கொள்வது எவ்வாறென ஐந்து காரணிகளின் கீழ் விளக்குக.**
- இறைவார்த்தையை தினமும் வாசித்து தியானித்தல்
- திருவிவிலியம் பற்றிய ஆழ்ந்த அறிவைப் பெற்றுகொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களின் மூலம் பயன்பெற முயற்சித்தல்
- திருப்பலியில் மறையுரைகளுக்கு நன்முறையில் செவிமடுத்து அதன்படி வாழ முயற்சித்தல்.
- இறைவார்த்தையின்படி அதாவது இயேசுவின் வார்த்தையை தினமும் வாசித்து அதன்படி எமது வாழ்வை மாற்றி பிறருக்கு நற்செய்தியாக செயற்படல்.
- நற்செய்தியை எமது வாழ்வாக்கி பிறரின் மகிழ்விற்கும் அமைதிக்கும் ஆறுதல் அழிப்பதற்கும் இறைவனின் பணியாளராகுதல்.

**(06) i. திருமுழுக்கின்போது கிறிஸ்மா (Chrism) தைலம் பூசுதல் மூலம் ஒரு கிறிஸ்தவனாக திடப்படுத்தப்படுவது எதற்காக என இரு விடயங்கள் எழுதுக.**
- தமது நம்பிக்கைக்கு ஏற்ப வாழ்வதற்கு
- தனது நம்பிக்கைக்கு எதிராக எழும் சவால்களை எதிர்த்து போராடுவதற்கு.

**ii. திருமுழுக்கின் மூலம் கிட்டும் இறையருள் மூன்றைக் குறிப்பிடுக.**
- சென்ம பாவத்திலிருந்து கழுவப்படல்
- கன்ம பாவத்திலிருந்து விடுவிக்கப்படல்.
- இறைவனின் பிள்ளையாகுதல்
- மூவொரு கடவுள் வாழும் இடமாகுதல்
- ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்று பதிக்கப்படல்.
- இறையரசின் உரிமையாளர் ஆகுதல்
- மற்றைய அருளடையாளங்களைப் பெறுவதற்கான தகுதி பெறல்.
- குருத்துவ, மேய்ப்பு, இறைவாக்குப் பணியில் ஈடுபடுதல்.

- கிறிஸ்துவின் மறையுடலில் உறுப்புக்களாதல்.
- திருச்சபையில் அங்கத்துவராதல்.

iii. திருமுழுக்கின் மூலம் நீர் பெற்ற மூவித பணிகளையும் எவ்விதம் செயற்படுத்துவீர் என ஐந்து விடயங்களில் விளக்குக.

**குருத்துவப் பணியை வாழுதல்:**

- குருத்துவ வகிபாகத்தில் செபத்தின் மூலம் அன்றாட வேலைகள், முகம் கொடுக்கும் சவால்கள், வாழ்வின் துன்ப துயரங்கள், வெற்றி தோல்விகள், மகிழ்ச்சிக்குரிய கருமங்கள் அனைத்தையும் இறைவனுக்கு வாழ்க்கைப் பலியாக ஒப்புக் கொடுத்தல்.
- மற்றவர்களுக்காக செபித்தல்
- ஞாயிறு திருப்பலியிலும் வசதியுள்ளபோது நாளாந்த திருப்பலியிலும் பங்குபற்றி குருவுடன் சேர்ந்து பலி ஒப்புக்கொடுத்தல்.
- திருப்பலியில் காணிக்கையாக எமது உழைப்பில் ஒரு பகுதியை ஒப்புக் கொடுத்தல்.
- திருவிருந்தில் பங்கேற்று வாழ்வையே இறைவனுக்கு உகந்த காணிக்கையாக அர்ப்பணத்தோடு ஒப்புக் கொடுத்தல்.

**இறைவாக்குப்பணி:**

- இறைவார்த்தையின்படி வாழுதல்
- சொல்லாலும் செயலாலும் நற்செய்தியை அறிவிப்பவர்களாக செயலாற்றுதல்.
- மறைபாடசாலையில் மறையாசிரியராக பணியாற்ற முன்வருதல்.
- பக்தி சபைகளில் இணைந்து பணி செய்தல்.
- வாழ்க்கையில் எல்லா சந்தர்ப்பத்திலும் இறைவனுக்கு சான்று பகர்ந்து வாழ்தல்
- நீதி நேர்மையுடையவர்களாக செயலாற்றுதல்.
- எப்போதும் நீதிக்கு குரல் கொடுத்தல்.

**அரசபணி:**

- அரசனாக ஆட்சி செய்யவன்றி, பணி செய்யும் தலைவனாதல்.
- நீதியுடைய தலைவனாதல்
- சுயநலம் கருதாது பிறர்நலன் கருதி பணிபுரிதல்.
- எப்போதும் பொது நலன் கருதி செயலாற்றுதல்.

**(07)** பின்வரும் தலைப்புக்களில் இரண்டினைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எதுக.

i. **'துய நற்கருணையின் சிறப்பியல்பான 'நினைவு கூருதல்'**

- நற்கருணையில் இயேசு உயிருடன் பிரசன்னமாக இருக்கிறார்
- கத்தோலிக்க திருவழிபாட்டில் ஊற்றும் உச்சியும் நற்கருணையே ஆகும்
- தூய நற்கருணையின் சிறப்பியல்புகளுள் நினைவு கூருதல் உண்டு
- கடவுளுக்கு நன்றி கூறி அதைப் பிட்டு "இது உங்களுக்கான என் உடல் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார்.
- கிறிஸ்துவின் உடலை உண்டு இரத்தத்தை பருகும் அனைவரும் கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றனர். கிறிஸ்துவும் அவர்களுள் வாழ்கின்றார்.
- கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளும் நாம் அனைவரும் ஒரே உடலாய் இருக்கின்றோம். இவ்வுடலே கிறிஸ்துவின் மறை உடல் எனும் திரு அவையாகும்.

- எனவே அவரைப் போல நாமும் நொருக்கப்பட, உடைக்கப்பட, ஆயத்தமாக இருக்க வேண்டும். பிறரது நல்வாழ்விற்காக, திரு அவையின் நல்வாழ்விற்காக நாமும் தியாகம் செய்ய வேண்டும்.

ii. **அருட்பணி மைக்கல் றொட்றிக்கோ**

- 1927.06.30 தெஹிவலையில் பிறந்தார். அமல மரி தியாகிகள் சபையில் இணைந்து மேற்படிப்பிற்காக உரோம், பிரான்ஸ் (பரிஸ்) பல்கலைக்கழகங்களில் கற்று கொழும்பில் சென் பீற்றஸ் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தார்.
- குருத்து வாழ்வை சேவைக் குருத்துவ நிலைக்கு கொண்டு சென்றார்.
- பொருளாதாரத்திலும் சமூக ரீதியிலும் துன்பப்படும் ஏழைகளுக்கு தீர்வு காண முயன்றார்.
- இளையோரின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டார்.
- பௌத்த - கிறிஸ்தவ சமயங்களுக்கிடையே நட்புறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தினார்.
- திருவழிபாட்டை தேசிய மயமாக்கினார்.
- நீதியை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கினார்.
- பதுளையில் பண்டாரவளையில் "சேவக செவன" எனும் பெயரில் அமைப்பு ஒன்றினை உருவாக்கினார்.
- பதுளை மறைமாவட்டத்தில் ஏழைகளுக்காக 'சுப செத் கெதர' எனும் அமைப்பினை ஏற்படுத்தினார்.
- 1987ல் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது துப்பாக்கி சூட்டினால் படுகொலை செய்யப்பட்டார்.

iii. **இஸ்ரயேல் இறைவாக்கினர்**

- இறைவனுக்காகப் பேசி அவரது செய்தியை மக்களுக்கு அறிவித்த குழுவினர் ஆவர்.
- பதவி, பட்டம், புகழ், பிரதிபலன் எதுவும் கருதாமல் இறை செய்தியை எடுத்துரைத்தவர்கள்.
- இறைவாக்கினர் எபிரேய மொழியில் 'நபி' எனவும் கிரேக்க மொழியில் 'ப்றோபேறஸ்' எனவும் அழைக்கப்பட்டனர். இதனுடைய அர்த்தம் ஒருவருக்காக பேசுபவர் என்பதாகும். அதாவது இறைவனுக்காக பேசுபவரே இறைவாக்கினர் என்பர்.
- இவர்கள் இறைவாக்கு உரைக்கும் போது மூவித சொற்பதங்களைப் பயன்படுத்தினர்.
    1. "ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்"
    2. "ஏன்கிறார் ஆண்டவர்"
    3. "ஆண்டவர் வாக்கு எனக்கு அருளப்பட்டுள்ளது."
- இஸ்ராயேல் இறைவாக்கினர் இரண்டு வகையாக வகைப்படுத்துகின்றனர்.
    1. எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினர்
    2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் ஆவர்.
- எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் பண்புகளாக
    1. தியானத்தில் ஆழ்ந்திருப்பதும்
    2. குழுவாக பணி செய்வதும்
    3. தமது தூதுப் பணியை உறுதிப்படுத்த அடையாளங்கள் செய்வதாகும்.
- எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினரை பெரிய இறைவாக்கினர், சிறிய இறைவாக்கினர் எனவும் வகைப்படுத்தலாம்.

iv. **கத்தோலிக்கர் நமது மறைப்பாடசாலை**

- இறைவாக்குப் பணியின் பிரதான பணியாக விளங்குவது மறையறிவித்தலாகும். மறையை அறிவித்தல் என்பது குருக்கள் துறவிகளுக்கு மட்டுமன்றி பொது நிலையினருக்கும் உரியதாகும்.

- பொது நிலையினர் கிறிஸ்துவின் வார்த்தையை நம்பிக்கையோடு ஏற்று தங்கள் சாட்சிய வாழ்வினால் தங்கள் சொல், நற்செய்தி பணி, மறைக் கல்வி கற்பித்தல் ஆகியவற்றால் இறைவார்த்தைப் பணியில் பங்கேற்கிறார்கள்.
- இது உலகில் அன்றாட சூழ்நிலைகளில் நிறைவேற்றப்படுவதினால் சிறப்புப் பயனை ஏற்படுத்துகிறது.

- அதன்படி மறைபாடசாலை கிறிஸ்தவனுக்கு பொது குருத்துவத்தின் மூலம் இறைவாக்குப் பணியில் ஈடுபட உதவுகின்றது.

**குறிக்கோள்:**

- இயேசு கிறிஸ்துவினால் இவ்வுலகில் ஆரம்பிக்கப்பட்ட பணியை தொடர்ந்தும் முன்னெடுப்பதன் மூலம் இவ்வுலகில் இறையரசைப் பரப்புதல்
- கிறிஸ்து இயேசுவோடு ஆழ்ந்த உறவை ஏற்படுத்திக் கொள்வது.
- அதன் மூலம் விழுமியங்கள் நிறைந்த கத்தோலிக்க சிறார்களை பயிற்றுவித்தல்.

**பணி:**

- வாரந்தோறும் மறைப் பாடசாலைகளை நடாத்தி மாணவர்களை கிறிஸ்துவைப் பின்பற்ற செய்தல்.
- திருவிவிலிய அறிவிப்பு போட்டியை நடாத்துதல்
- வருட இறுதியில் மறைப்பாடசாலை பரீட்சையை நடாத்துதல்
- சுய விருப்புடன் முன் வந்து சிறார்களுக்கு மறைக்கல்வி வளங்குதல்.
- மறையாசிரியர்களின் அறிவை காலத்திற்கேற்றவாறு வளர்த்தல்.
- தேசிய மறையாசிரியர் பரீட்சைக்காக மறையாசிரியர்களை ஆயத்தம் செய்தல்.

வெளியீடு :
தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்,
1ம் மாடி, இல. 19, பல்கம் இடம்,
கொட்டா வீதி, கொழும்பு - 08.

தொலைபேசி : 011 - 2685459
தொலை நகல் : 011 - 2665021
மின் அஞ்சல் : natcatbible@gmail.com

விலை : ரூபா. **600/=**